# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 10 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 11

## திருக்குறள்

1. **“பேதைமை என்பது ஒன்று யாதெனில் ஏதம் கொண்டு
   ஊதியம் போக விடல்”**
   அ. இங்கு ஏதம் என்பது குறிக்கும் கருத்து யாது?
   ஆ. இக் குறளில் யாருடைய செயல் கூறப்பட்டுள்ளது?
   இ. ஊதியம் என்பது யாது?

2. **“நாணாமை நாடாமை நார் இன்மை யாதொன்றும்
   பேணாமை பேதைத் தொழில்”**
   அ. நார் என்பது இங்கு உணர்த்தும் பொருள் யாது?
   ஆ. நாடாமை என்பது இங்கு எதனை உணர்த்துகின்றது?

3. **“ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
   தான் புக்கு அழுந்தும் அளறு”**
   அ. இக் குறளில் அளறு என்பது உணர்த்துவது யாது?
   ஆ. இக் குறளில் பேதையின் எத்தகு நிலை காட்டப்படுகின்றது?

4. **“ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை
   பெருஞ் செல்வம் உற்றக் கடை”**
   அ. தமர் என்பது எத்தகு பொருளை இங்கு உணர்த்துகின்றது?
   ஆ. பேதை செல்வம் பெறும் போது யார் நன்மை பெறுவர்?

5. **“பெரிது இனிது பேதையர் கேண்மை பிரிவின் கண்
   பீழை தருவது ஒன்று இல்”**
   அ. கேண்மை என்பதன் கருத்து யாது?
   ஆ. பேதையரின் நட்பு ஏன் இனிமையானது?

6. **“கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
   குழா அத்துப் பேதை புகல்”**
   அ. இக் குறளில் வெளிப்படும் அணி யாது?
   ஆ. பள்ளி என்பது குறிக்கும் கருத்து யாது?

07.பேதைமை என்பதற்கு வள்ளுவர் கூறும் வரைவிலக்கணம் யாது?

08. பேதைமை கொண்டோரின் தொழில்களாக/செயல்களாக வள்ளுவர் எவற்றைக் கூறுகின்றார்?

09. பேதைமை கொண்டோரின் செயலின் விளைவுகள் அல்லது அவர்கள் அடையும் துன்பங்கள் எவையென வள்ளுவர் கூறுகின்றார்?

10. பேதையரின் இழிவு பற்றி வள்ளுவர் எவ்வா காட்டுகின்றார்?

11. பேதைமை அதிகாரத்தில் அணி வெளிப்பாடு பற்றி எடுத்துரைக்க?

12. பேதையின் கையில் பொருளொன்று கிடைத்தால் யாது நிகழும் என வள்ளுவர் கூறுகின்றார்.

13. பேதையுடனான நட்பு பற்றி யாது கூறுகின்றார்.